செ.வெ.எண் :06/ஜுன் நாள்:02.06.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## தேசிய உணவு பாதுகாப்பு இயக்க அரிசி திட்டத்தின் கீழ் மானியம் பெற விரும்பும் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் அரிசி, பயறு, ஊட்டச்சத்துமிகு சிறு தானியங்கள்,எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் வித்து மரப்பயிர்கள் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த நிதியாண்டில் தொகுப்பு செயல் விளக்கத்திடல்கள்,உயர் விளைச்சல் ரக விதைகள் விநியோகம், நெல் நுண்ணூட்டம் விநியோகம், பயிர் பாதுகாப்பு மருந்து விநியோகம், பம்ப் செட் விநியோகம் ஆகிய இனத்தின் கீழ் ரூ.104.435 இலட்சம் பயனாளிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டது.

அதே போல் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் பயறு திட்டத்தின் கீழ் தொகுப்பு செயல் விளக்கத் திடல், உயர் விளைச்சல் ரக விதைகள் விநியோகம், பயறு விதை உற்பத்தி மானியம், பயறு நுண்ணூட்ட விநியோகம், உயிர் உரங்கள் விநியோகம், ஜிப்சம் விநியோகம், பயிர் பாதுகாப்பு மருந்து விநியோகம், சுழல் கலப்பை விநியோகம், விசை தெளிப்பான் விநியோகம் மற்றும் பிளாஸ்டிக் குழாய்கள் விநியோகம் ஆகிய இனத்தின் கீழ் ரூ.33.341 இலட்சம் பயனாளிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டது.

நடப்பு நிதியாண்டிலும் 2020-21 தேசிய உணவு பாதுகாப்பு இயக்க அரிசி திட்டத்தின் கீழ் தொகுப்பு செயல் விளக்க திடல், பயிர் அடிப்படையிலான செயல் விளக்கத்திடல், உயர் விளைச்சல் ரக விதைகள் விநியோகம், நெல் நுண்ணூட்டம் விநியோகம், பயிர் பாதுகாப்பு மருந்து விநியோகம், களைக்கொல்லி விநியோகம் மற்றும் பம்ப் செட் விநியோகம் ஆகிய இனத்தின் கீழ் ரூ.94.140 இலட்சம் மானிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்களது பெயர் மற்றும் விவரங்களை சம்மந்தப்பட்ட வட்டார வேளாண்மை அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளவும். முன்னுரிமையின் அடிப்படையில் விவசாயிகள் தேர்வு செய்யப்படுவார்கள். எனவே சம்பந்தப்பட்ட வட்டார உதவி வேளாண்மை இயக்குநர் அவர்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**